432

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 29 APR 1914 MADRAS.

மானவல தியான மஞ்சரி.

இஃது

சென்னை பி. பெரியப்பா முதலியார் அவர்கள்
குமாரர் கோலார் தங்கவயல் நந்திதுர்க்கம்,
மெக்கானிகல், டிராப்ட்ஸ்மென்

பி. துணவேலு முதலியார் அவர்களாலருளிச்செய்து

உரையாசிரியர் மஹாவித்வான், காஞ்சீபுரம்.
சபாபதி முதலியார் அவர்கள் குமாரர்.
கா. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள்
மாணவர் அத்திப்பேடு

சுப்பராய முதலியாரால் பார்வையிடப்பட்டது.

முதல் பதிப்பு 2,000 காப்பி.

வேலூர்:
விக்டோரியா அச்சுக்கூடத்திற்
...பிக்கப்பட்டது.

...914.

Q2:414
N14
121692



P. Gunavelu Mudaliar

முகவுரை.

அசண்டாகாரமாய் விரித்திரானின்ற யிந்நிலவுலகிடையே விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் யென்னும் மூவகையான் மகோடிகளும் வுய்வான் வேண்டி அருவாகியும், பலத்திருநாமங்கள் கூடிய உருவாகியும், அருவுருவமென்னும் லிங்கசொரூபியாகியுந்தனையடைந்தவன்பர்களுக்குத் தட்டாமோக்ஷங் கொடுக்கும் யெம்பெருமான் திருவருளை யடையாது வாணாளை வீணாகப்பலபிரகிருத்தியங்களிற் செலுத்தி யிக்காயத்தை சாக்கைக்குப் பரிகொடுக்கும்யான் மாக்களுக்கு முன்னோர்களால் தேவாரத்தில்: —

"பூக்கைக்கொண்டு நின்பொன்னடி போற்றிலார்
நாக்கைக்கொண்டு ந்நாம நவிற்றிலார்
ஆக்கைக் கேயிரைத் தேடியிலமந்து
காக்கை கேயிரையாகிக் கழிவரே"

என வனந்தகோடி முன்னூல்கள் வோலமிடுவதை நாம் கேட்டும், மனமாற சில பிரபந்தவாயிலா வாய் வாசித்தும்.

"கற்கக் கற்க கசடற கற்றபின்
நிற்க வதற்குத்தக" எனவும்
"ஓதி யுணர்ந்தும் பிறர்க்குறைத்துந் தானடங்காப்
பேதையினும் பேதையரிற்."

என்பதானு முணர்க. ஆகவே தேவர்களாயினும் மோக்ஷமடைவதென்றால் மானிடப்பிறவிதானடையவேண்டுமென்பது ஆகமநுணிபு, ஆனது பற்றியே :—

"எண்ணரிய பிறவிதனிற் மானுடப்பிறவி தானியாதினுமறிதறிது காண்.

என்றுநமதுமுன்னோர்கள் ஓலமிடப்பட்டிருக்கின்றனர், பின்னும் யிச்சிறுநூலைக் கண்ணுறுமன்பர்கள் வொவ்வொருவரும் யென்றும் வழுவாச் சாயுச்சிய பதவியுடைவான் வேண்டி எத்தொழிலிற் கட்டுப் பட்டவர்களாயிருந்த போதினும் எம்பெருமான் நாமத்தை யிமைப்பொழுதேனு மிடைவிடாது மானஸ்தியானஞ் செய்து திருவருளைப் பெறுமாறு வேண்டுகின்ற,

அடியார்க்கடியேன்
பி. துணைவேல்.

Q2:414
N14

உ

சிறப்புக்கவி

இஃது

உரையாசிரியர், மஹா வித்துவான், காஞ்சீபுரம் சபாபதி முதலியார் அவர்கள் குமாரர், கா. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் மாணவர் அத்திப்பேடு. சுப்பராய முதலியாரா லியற்றிய

அகவற்பா

அவாவெனு மகந்தை வேறறுவித்து
வம்பரத் தொளியை யருளொடுக் கொண்டு
சிவாவெனு நாமம் சிந்தையுட் தங்கச்
சித்தந்தெளிந்து முத்திக்கு வித்தாய்
மூலத்துதித்த முச்சுடற்கனலை
மானஸதியான மகிழ்வொடும் பூண்டு
குணபதி நாமம் குறிப்பா யுரைத்தச்
சென்னை யம்பதியிற் செழிப்புற வளர்ந்த
சீதை நாட்டிடையே செல்வர் வாழ் கோலார்
தாரணி போற்றுந் தங்கமா வயல்சூழ்
நந்தி துர்க்கமென்னு நற்பெருந் துறையில்
டிராப்ட்ஸ்மென் னென்னு நலமுறுங் காவல்
யின்பமாய்ப் பூண்ட யினிது வேளாளன்
பெரியோர்போற்றும் பெரியப்பன் சேயனும்
சந்தியின் பின்னவன் தனிப்பெயர் பூண்ட
வன்பனும் வேலனன்புடனுறைத்த
மானஸதியான மஞ்சரி துதித்திட
ஆனமா முடலினுள் வினைக்களைந்து
வனவர் நாட்டின் வழிபடை வோமே.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ வடிவாம்பிகை துணை.

மானஸ தியான மஞ்சரி.

காப்பு.

விநாயகர் துதி,

கலி விருத்தம்.

பத்தன் பாடுமிம் மானஸமஞ்சரி
குற்றமின்றிக் குறைவர முற்றறக்
கற்றைவார் சடைக் கண்ணவற் சேயனுஞ்
சித்தியானை தன் சேவடி போற்றுவாம்.

நூல்

பொது தரிசனவிசேடம்

விருத்தம்.

1. காணவேண்டுநின்கடைவேடத்தைக்கண்டாட வேண்டுந்
தோணவேண்டு நின்தொண்டருக்குற் றொண்டுசெய்ய
[வேண்டும்
பூணவேண்டு நின்புள்ளிமயிலேறும் புதல்வனைச் சேர
[வேண்டும்
வீணர்கள்வாய்மூடவேண்டும் வெள்ளிமலைத் தயாபரத்
[சத்துவனே.

2. தாசியவளொருத்தித் தனித்திருப்பாள் நங்கருத்தில்
வேசியவளொருத்தி வெள்ளாடை நிறத்தினளா
மாசிலாமணியிடையே மறைந்தாள் மலைக்கிழத்திப்
பாசந்தவிர்த்தாள்பரமாக்கினுளெங்கள்பரஞ்சோதியே

3. முக்கோணியின் நுனிநின்றான் முச்சுடரா
னக்கோனை வலம்வந்த வைங்கரற்குத்
தக்கோலத்தானீந்தான் றங்கனியை
முக்காலும் வலம்வந்த முருகனுஞ் செவ்வேள் முன்
னிற்கவே.

4. தேனயக்குந் திருவாதவூரடிகள் திருப்பாட்டை யென்
கோனயந்துபொருட்கொண்ட தெய்வசிகாமணியினிட
பானடைந்த பராபரி யென்பந்த வினைப்பறந்தோட
[மருந்தூட்டி
வானடைய வழிகாட்டிவைத்தனளே யெங்கள்வடிவம்
[மையே.

5. இனியேயெனனக் குடம்புபடைப்பா னெமதீசன்
றனியேதனித்திருக்க வருட்புரிவான் றகர்வீரன்
சனியாமென்வல்வினையைச் சாடினானென்னேசன்
கனியமுதமூட்டினானருநரகடையாதேயென்பமாதோ

6. நுனியேநுனியிநுட்பமே நுட்பமாயமர்ந்த சிவமே
மணியேமண்மயக்க மாற்றுதலரிதே வந்தோவெந்தாய்
சனியேதுடர்ந்த வெவ்வினைநோயறுத்த சகசவாழ்வே
பணியேபூண்ட நின்கடை வேடங்காண வெனக்கருட்
[செய்கோவே.

7. குற்றமுண்ட கோதையர்போற்கோணலடி பகை குரு
[ள்ளுஞ்
சிற்றுண்ட வங்கம்போற் சிந்தையனலானதடி யென்ற
[றுள்ளங்
கற்றுண்ட கவிஞர்பிரலுரை செயக்காணுமடி நின்கரு
[ணை வெள்ளம்
பொற்கண்ட வேழையேபோற் பொங்குமடி யெந்தனு
க்கே.

ஜோதிதரிசனம்.

8. ஆரா ராரூரோ ஆரூரறிந்தாரோ ஆதிகுலத்
தாராரோ ஆரூரறிந்தாரோ வன்று.

9. பாரார் வாராரோ பாழ்குலத் தெம்மக்கள்
பாரார் பாராரோ பாரில்.

10. சேறார் சேறாரோ செவியிடங் கொள்ளாதே
செம்மாந்த சிறுவர்டமக்கு.

சீதைநாடு அல்லது கோலர் தங்கவயல் பண்-கோல்லி.

11. நாட்டினேன் மனங்கூட்டினேஞ் சிவப்பூட்டினாற்
குணங்காட்டினான், மூட்டினேன் முல்லைக்காட்டினா
[ன் மைய
லூட்டினான் மனக்குன்றிலே, வீட்டினேன் வினைப்
[பாட்டினால்
வேலைக்காட்டினான் வினைதீர்கவே, கூட்டினான்குணத்
தோன்றலே சிவன்காட்டினான் சீதை நாட்டிலே.

12. ஓடினேனோடி நாடினேனாடிப் பாடினேன் திருவொற்
[றியூர்
வாடினேன் மிகவாடினேன் வடிவம்மையின்றிருப்பாத
[த்தைக்
கூடினேன் கூத்தாடினேன்*குணத்தோன்றலின்றிரு
[வாக்கியம்
பாடினேன் தந்திப்பின்னவன்றனைச் சீதைவாழ் திரு
‡ [நாட்டிலே.

13. லிங்கமேயண்ட பிண்டமே றொண்டர் றொண்டனே
சீதைநாட்டிலே, அங்கமே யவன் சங்கமே சிவ
சங்கமே ஜீவன்முத்தியே, தங்கமே தவச்
சிங்கமே தக்கனார் தலைதனை வெளவினா, யெங்
ஙனேயெங்களையனே யெனையாட்கொண்டான்
குணத்தோன்றலே.

---

* குணம்—குருபெயர்.

‡ குருபெயர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
29 APR 1914
MADRAS.

திருவண்ணாமலை

14. சோதியே பரஞ்சோதியே யெனையாட் கொண்ட
வண்ணாமலை, யாதியே வயன்மாற்கறி வொண்ணா
வையனே மிகத்துய்யனே, பாதியே மதிசோதியே
பத்தர்நேயனே பரமேட்டியே, வோதினேனுன்னை
வோதினா னுமுண்மை கண்டனன் மன்றுளே.

அஞ்செழுத்துண்மை-பண்-பழம்பஞ்சுரம்

15. காணாதுகாணலாமஞ்செழுத்தாற்கண்டுதெளிந்தாடுமே
முமை,யெழுத்துத்,தோணாதுதோணுமேதோமெழுத்துச்
சிவதோப்புக் குள்ளாடுமோ மோரெழுத்துப்; பூணாது
பூணுமே பூவெழுத்து வது புவியினிலெங்குமே பூத்
தெழுத்து, வாடாது வாடுமே வவ்வெழுத்து
வம்பிகையாளற னருளெழுத்து.

திருச்செங்காடு.

16. எங்குமிருக்கு மெமதீசனென்னுட்புகுந்த வருளாளன்
வங்கங்குழைந்து வருச்சித்த வடியார்டமக்கு வருட்
[குருவாம்
பொங்கர வணிந்த புண்ணியானும் பொய்யர்கடமக்கு
[வெய்
யவனாஞ், செங்காடமர்ந்த செழுமணியாஞ் செந்தில்
வேலைத் தருமணியாம்.

பண்-பழந்தக்கராகம்.

ஜோதி தரிசனம்.

17. கண்டேனா னிருகண்ணாற் கண்டு கொண்டேன்
தெற்குமுகம், விண்டேனா னாதித்தன் வாரந்தனிற்
வீதியிலே, தொண்டனவன் குணபதியின்றொண்டன்
றன்சுதனுடனே, கண்டேனான் திரிபுரனைச்சீதைவாழ்
[காடகத்தே.

18. குலங்கெடுத்த குமரிதன்னைக் கூட்டுறவு செய்ததனாற்
நலங்கொடுக்கு நாமந்தனை நவின்றிடலு நாளடைவிற்
வலங்கொண்டுவந்த குணவாக்கியத்தின் தன்பெருமைப்
பலங்கண்டு பார்த்தோமே பரஞ்சோதி நிறத்தானே.

19. மனக்குரங்கை மையத்திலாடும்படி செய்ததனாற்
சினக்குரங்கு சிகரத்தின் செல்வன்றனைக் காணாமற்
வனக்குரங்கே போன்று நான்வானவனைத்தானடையா
தினத்துறங்கு நாடியேன்றனக்கு மருணல்குவனோ.

திருமயிலாடு துறை.—மாயவரம்

20. மறையானை மாற்கண்டற்கருள் செய்த மதியானை
யிறையானை யெம்மானையென்மனத்தேகுடிகொண்டப்
பிறையானைப் பெண்ணோடாணாகிய பெம்மானைத்
துறையானை மயிலாடு துறையிடையே கண்டேனே.

திருநாகைக் காரோணம்.—நாகப்பட்டணம்.

21. சாற்றினேன் பாமாலைச் சந்ததமுஞ் சங்கரற்கு
மாற்றினானென்வினையை மறையோர்ந்தக் குணத்தோ
[ன்றல்
போற்றினேனின் னஞ்செழுத்தைப் பிறவிபிணிசேரா
[மே
காற்றவனே கடனாகைக் கண்மணியைக் கண்டேனே.

திருச்செந்தூர்.

22. அத்தனை யன்பர்களினிதய மலர்க்கமலத்தின்
முத்தனை முத்திக்கு வித்தான முதலவனைச்
சித்தனைச்செல்வர் வாழ்திருச்செந்தூர் மேவியவெம்
வித்தகனை வேலவனை யென்னுள்ளே கண்டேனே.

ஆன்மாதரிசனம்.

23. வருதேருமெம்பிரானென்னையாண்ட தம்பிரான்
குருபோல வந்தானைக், குவலயத்தைப் படைத்தானைக்
கருதுளியிற் கலந்தானைக் காரணமய் நின்றெனக்கு
உருவத்தினொளிகாட்டி வெளித்திட்டானுமைபாகன்.

24 சின்னஞ் சிறுவயதிலென்னைச் சிவமாக்கச் சித்தங்
[கொண்டுத்
தன்கரத்தாற் சிற்பித்தத் தனிலிங்கந்தன் னெஞ்சிற்
மின்னொளியாயுருக்கொண்டு மனதிடையே மருவியெம்
மன்னவனை மறையானை மன்றுள்ளே கண்டேனே.

திருவண்ணாமலை.

25. மதியானை மதியார்க்கு மாற்றானை மாமருந்தைப்
புதியானைப் பழையானைப் புனலணிந்தப் பெம்மானைப்
பதியானைத் திருவருணைப்பதியிடையேதோன்றியவெம்
முதியானை முக்கணனை யென்னுள்ளே கண்டேனே.

திருக்கச்சூர்.

26. * வந்திக்கு வாக்களித்து வாழ்த்தார்க்கு நரகளித்து
‡ மந்திக்குக் கதியளித்து மாறாதபுவியளித்தச்
செந்தீக்கு நிகரானத் திருக்கச்சூர் செழுமணியி
னந்தமதையருளாலே வந்தியிடைக்கண்டேனே.

ஸ்ரீ வில்லிவாக்கம்.

[றியவெங்
27. திருவோங்குர் தொண்டைவள நாட்டிடையே தோன்
குருவாகிக் குறையிறந்தார் தம்வினையைக் காய்ந்திட்ட
அருவாகுமகத்தீசக் கண்மணியை யென்னரசைக்
சரியானை யென்னுள்ளே கண்டேனான் கண்டேனே.

---

* வந்தி—பிட்டுக்கு மண்சுமந்தபடலம்.

‡ மந்தி—முசுகுந்த சக்கரவர்த்தி.

திருக்காளத்நி—விருத்தம்.

28. தேனமர்ந்தத்திருக்காளத்தித் தெள்ளமுதே தேவர்
[கோவே
ஆனமுத முண்டுவக்குமொரு பெருந்தகையே
வானவர் தம்வலிகெடுத்த வாட்கணுமைபாகா
ஆனுடம்பு கெடவோரு பாயமருளென்னுள்ளத்தே.

சீகாழி-பண்-குறிஞ்சி.

29. பாரோர் புகழ்ந்தேத்தும் புகலி பெரும்பதியுள்
நாராயணனறியா நங்கையோர் பங்குடைய
நீரார்திருமேனி நெற்றிக்கண்ணவனைச்
சேராச்சிறுவர்க்கள் செந்தீக்கிரையாமே.

திருப்பாசூர்.

30. பைங்கணரவணிந்தப் பாசூர்மேயவனை
நங்கையிடங்கொண்ட நம்பனை நம்முள்ளே
செங்கைகள் கூப்பிநின்று சிறுபொழுதமர்ந்திட்டாற்
பங்கமில்லாம லெங்கள் பரமனைக்காணுதுமே.

திருவாலங்காடு.

31. பாலார்வளஞ்சூழ்ந்த பார்புகழ் தொண்டைதனுட்
காலார்வண்டினங்கட் கனிகள்மதுவுண்ணுஞ்
சேலார் சோலைசூழ் திருவாலங்காடமர்ந்த
நீலகண்டன்றன்னை நினையார் நீருமே.

திருவிற்கோலம் என்பது கூவம்.

32. விண்ணோர் விரும்பிய வெம்வித்தகன் விற்கோலம்
பண்ணார் பாடவல்லார் பிறவிப்பிணி நீங்கிக்
கண்ணாற்காதல்செய் கங்கையின் கேள்வன்றனை
யெண்ணுமன்பர்காள் யெமனுக்கிரையாகார்.

திருமாற்பேறு.

33. அக்கரவணிந்தானை யன்புடனருச்சிக்கச்
சக்கரமாற்றனக்குச் சக்கரமளித்தானை
மிக்கதோர் வளங்கொண்ட மாற்பேறதன் தன்னில்
யிக்குவேளைக் காய்ந்த வீசனைக்காணுதுமே.

* திருவலிதாயம்.

34. வலிகெடுத் தாட்கொண்ட வலிதாயக் கண்மணியைக்
கலிதொடர் வாராமற் கவிபாடுமடியார்கண்
கிலியினைப் பொடியாக்கித் தன்கிரியிடை சேற்கின்ற
வொளியினை யென்னுள்ளே கண்டடைந்துய்ந்தேனே.

திருவொற்றியூர்.

35. தேவர்கள் போற்றுகின்ற திருவொற்றியூருறையு
மூவுருவானவனே மும்மணித்தியாகேசா
ஆவிடை யுடையவனே வன்பர்களாரமுதே
நாவிடை நாமிருத்த நம் நம்பனைக் காணுதுமே.

92:414
N14

திருமயிலை.

36. ஓதவல்லார் கடமைவுன்னடி சேர்க்கின்ற
மாதவர் வாழ்கின்ற மாமயிலைப் பதியுள்
காதல்செய் மங்கையொடுங் காபாலந்தாங்கியைக்
கோதறவெம்மனத்துட் கண்டடைந்துய்ந்தேனே.

திருக்கடவூர்.

37. யங்கையின் மாங்கலிய மாற்றியக் கலயனைச்
சங்கையில்லாம லெங்கள் சதுர்முகன் போற்றவே
திங்களணிந்தவனே திருக்கடையூர் மேய
மங்கையிடத்தவனே மனதிடைக்கண்டேனே.

---

* திருவலிதாயம் - என்பது பாடி, வில்லிவாக்கத்திற்கு தென்மேற்கிலுள்ளது.

காஞ்சீபுரம்-பண்-நட்டராகம்.

38. வன்றொண்ட சுந்தரற்கும் வாக்கரசப்பாற்கும்
புன்சமண் சாக்கியற்கும் பிறவிப்பிணிவாராமே
யின்புற வீடளித்த வெம்பிரானே கம்பன்
கனிகள் பலவுதிருந்திருக் காஞ்சி நிலைமணியே.

தில்லைசந்த விருத்தம்.

39. நல்ல மருந்தொன்ற நாடியிருக்கு தின்னாட்டிற்குள்ளே
வல்ல மருந்திது வந்திக்கு வாளாயுகந்தமருந்து
கள்ள மருந்திதுக். காலனைக்காய்ந்திட்ட கந்தமருந்து
தில்லைமருந்திது தொண்டற்குத்தோற்றிய தேவமரு
[ந்தே.

திருவாலவாய்-பண்-பழந்தக்கராகம்

40. மாமணியே மறைக்கண்மணியே மலையத்வஜன் பெண்
[மணியே
தேமணியே தென்மதுரை வந்தியினற் பிட்டுண்ட
கோமணியினிடத் தமர்ந்த கோகிலமே யென்னிதயப்
பூமணியைப் புண்ணியனை யென்னுள்ளே கண்டேனே.

திருவான்மியூர் குறுந்தொகை.

41. வன்னெஞ்சமாதர்கள் வார்த்தைக்கு நாணாது
புஞ்செய்கை நீக்கிப்புரமெரித்தான் கோயி
லொன்பது வாசலு மொக்கவடைக்குமுன்
வந்தடைவீர்களே வான்மியூர் மாந்தர்காள்.

மலபரிபாகம்.

42 ஒழித்தேனுலகு பந்தம்
கழித்தேன் கலியுகதொந்தம்
பழித்தேன் பாவையரின்பம்
விழித்தேன் விண்ணுலகின்பம்.

மாயாபந்தம்-பண்-பழம் பஞ்சுகம்.

43. மண்ணும் விண்ணுங் கண்டாரே மார்க்கமேதாஞ்
சொல்லாரே, பெண்ணும் பொன்னுங்கண்டவரே
பேய்பிடித்தாடுவரே, மண்ணும் விண்ணுமெ
ன்னுள்ளே மறியாதார்க்கு வேற்றுமையாய்ப், பன்னிப்
ப்பேசுறார் பாதகமே செய்மாந்தர்காள் [பன்னி

44. காணார்காணார்காணாரேகண்டுகொண்டாற்சொல்லாரோ
காணார் காணார் காணாரே காசுக் காசைவைப்பாரே
காணார்பாதங் கருதாரைச்கருங்காற் கூற்றன்கிட்டுவரோ
காணார் காணார் காணாரே கருத்தொடுங்கி நில்லாரே.

உலோகோற்பத்தி விருத்தம்.

45. ஒருபுள்ளி வன்மையினாலோருருண்டை வடிவாக்கி
வொருபுள்ளி வன்மையினாலுலகமெலாந் தான்விரித்து
வொருபுள்ளி வன்மையினாலுருத்தரித்து நின்றானும்
வொருபுள்ளி வன்மையினாலோங்காரமுதித்ததுவே.

திருச்சங்கக் காட்சி.

46. ஊதூது சங்கே நீ ஊதூது சங்கே
உண்மையைக் கண்டேனென்றூதூது சங்கே.

47. உள்ளொளி கண்டேனென்றூதூது சங்கே
உள்ளதுரைப் பேனென்றூதூது சங்கே.

48. வள்ளல் வந்தானென்றூதூது சங்கே
வார்த்தைகள் சொன்னானென்றூதூது சங்கே.

49 உள்ளங் குளிர்ந்ததென்றூதூது சங்கே
ஊமை யெழுத்தானதென்றூதூது சங்கே,

50 சிவகாமியைக் கண்டேனென்றாதூது சங்கே.
சித்தந் தெளிந்ததென்றாதூது சங்கே.

51. மங்கையிட மானனென்றாதூது சங்கே
மாமலை மாற்றினனென்றாதூது சங்கே.

52. பொங்கரவணிந்தா னென்றாதூது சங்கே
போர்மதனைக் காய்ந்தானென்றாதூது சங்கே.

53. திங்களணிந்தா னென்றாதூது சங்கே
திரிபுரமெரித்தா னென்றாதூது சங்கே.

54. கங்கையணிந்தா னென்றாதூது சங்கே
கார்த்திகேயன் வந்தானென்றாதூது சங்கே.

55. முந்தவினை போச்சுதென்றாதூது சங்கே
மூவர்களைக் கண்டேனென்றாதூது சங்கே (ஊதூது.)

ஆன்ம இரக்கம்.

கீர்த்தனம்-ராகம்-நாதநாமக்கிரியை

56. அடதாளம்.

பல்லவி.

என்ன சொன்னலுங் கேட்க வில்லையே
யெம்மானுளந் தோற்ற வில்லையே (என்)

அனுபல்லவி.

தன்னைச் சொன்னலுந் தனித்துக் கேளார்
பொன்னையே வேண்டிப் போற்றிசெய்வார்கள் (என்)

சரணங்கள்.

மண்ணைசசொன்னாலு — மதித்திடுவார் மாய
பெண்ணைச் சொன்னாலும் — போற்றிடுவார் தினம்
விண்ணைச் சொன்னாலே — வேறுப்படைவார்கள் (என்)

மறைந்து வந்து — மாயப்பிசாசம்
தரித்து நின்றால் — தவப்பயனென்பார்
விரித்துரைத்தால் — விண்டிலரென்பார் (என்)

வாழி விருத்தம்.

வேதங்கள் நான்கும் வாழி
வோதிய வெங்குறவன் வாழி
மேதினி யெங்கும் வாழி
பூதிபூசிய நின்மெய்யடியர் வாழியே.

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

குருதியான மஞ்சரி, மானஸதியான மஞ்சரி அருள்விளக்கமாலை யென்னும் புத்தகங்கள் வேண்டுபவர் அடியிற்கண்டிருக்கும் விலாசத்திற்கு அறையணா ஸ்டாம்பு வைத்தனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

மூன்றாம் பாகம் அருள்விளக்கமாலை
அதிசீக்கிரம் வெளிவரும்.

பி. குணவேலு முதலியார்
மெக்கானிக்கல் டிராப்ட்ஸ்மென்,
நந்திதுருகம் கம்பெனி,
வூர்காம் போஸ்ட்,
கே. ஜி. எப்.
மைசூர் சம்ஸ்தானம்.

P. Gunavelu Mudaliar.
Mechanical draftsman,
The Nundy droog, Gold Mines,
Oorgaum Post,
K. G. F.
Mysore Province.